OS.No.80/2022 – 27.11.2024

PW1 – மாது

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால் நான் படிக்கவவில்லை. எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியுமா என்றால் தமிழ் படிக்கத் தெரியும். எழுதத்தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். பிரமாண வாக்குமூலத்தில் நான் என்ன வேலை செய்கிறேன் என்ற வாசகம் இல்லை என்றால் சரி. நான் தருமபுரியில் பைனான்ஸ் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் குடும்பத்துடன் தருமபுரியில்தான் வசித்து வருகிறேனா என்றால் ஆம். பிரதிவாதி எனக்கு உறவினாரா என்றால் இல்லை. தரகர் மூலமாக நிலம் விற்கபோகவதாக நான் பிராதில் கூறவில்லை என்றால் சரி. தாவா சொத்திற்கு அருகில் எனக்கு நிலம் உள்ளது.

நான் வசித்து வரும் இடத்திலிருந்து தாவா சொத்து 45 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரி. கிரய ஒப்பந்தபத்திரம் வா.ச.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. அதற்கு முன்னர் மற்றொரு கிரயப் ஒப்பந்த பத்திரம் உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ1 ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்ட தேதியில் தான் மற்றொரு ஒப்பந்த

பத்திரம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரி. முந்தைய கிரய ஒப்பந்தத்தை ரத்து செய்தது பற்றியோ எந்த தேதியில் ரத்து செய்யப்பட்டது என்றோ நான் வழக்குரையில் கூறவில்லை என்றால் சரி. பிரதிவாதி இந்தகிரய ஒப்பந்த பத்திரத்திற்கு முன்னர் வேறு 2,3 கிரய ஒப்பந்த பத்திரங்கள் செய்து அதனை ரத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா கிரய ஒப்பந்த பத்திரத்திற்கு முன்னர் ஒரு கிரய ஒப்பந்த பத்திரம்தான் எழுதப்பட்டது. தாவா சொத்திற்கு அருகில் என்னுடைய சொத்து உள்ளது என்று நான் குறுக்கு விசாரணையில் கூறி உள்ள நிலையில் வழக்குரையில் அதைப்பற்றி நான் கூறவில்லை என்றால் சரி.

தாவா கிரய ஒப்பந்த பத்திரத்திற்கு முன்னர் ரத்து செய்த கிரய ஒப்பந்த பத்திரங்களை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் இருக்கிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.